**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 75 of 2021 |
| Prosecution Witness | : | PW2 |

18.08.2025.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : சுப்ரமணியன் | | : | |
| Father Name | : சிதம்பரம் | Calling | : | வீட்டில் இருந்து வருகிறார் |
| Village | : காருகுடி | | | |
| Taluk | : முசிறி | Age | : | 78 |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது காருகுடி குடியிருந்து வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். எதிரிகளை தெரியும். எதிரிகள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். 28.10.2020 அன்று மதியம் 02.30 மணிக்கு மேல் நான், அ.சா.1, எனது மனைவி ஆகியோருடன் காருகுடியில் உள்ள செல்லாண்டியம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள அங்காள பரமேஸ்வரியம்மன் கோவிலுக்கு குலதெய்வ வழிபாட்டிற்கு சென்றிருந்தோம். அப்போது எதிரிகள் செல்லையா மற்றும் அவரது மனைவி ஆகியோர் தோட்டத்தில் சோளத்தட்டை அறுத்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் சாமி சன்னதிக்கு சென்றுவிட்டோம். பூஜைக்கு வேண்டிய சாமான்களை எடுக்க மறந்துவிட்டதால், அதை எடுப்பதற்காக எனது மகன் செல்லாண்டியம்மன் கோவிலிருந்து வந்து அதை எடுத்துக்கொண்டு வந்தார். எனது மகனை கோவிலுக்கு வரவிடாமல் வழியில் தடுத்து அரிவாளை ஓங்கிக்கொண்டு 1வது எதிரி நின்று கொண்டிருந்தார். நானும் எனது மனைவியும் கோவில் சன்னதி அருகே நின்றுகொண்டிருந்தோம். 1வது எதிரி எனது மகனுடன் தர்க்கம் செய்வதை பார்த்து நான் எனது மகனை கோவிலுக்கு வா என்று கூப்பிட்டோம். 1வது எதிரி செல்லையா எனது வேட்டியை

**பிடித்துக்கொண்டு என்னை வெட்டுவேன் என்று அரிவாளை ஓங்கிகொண்டு நின்றிருந்தார். அதை எனது மகன் வீடியோ எடுத்தார். எனது மகன் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை—**

**போலீசார் என்னை விசாரித்தார்கள். சண்டை நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. தற்போது சொன்ன சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் இவ்வளவு விவரங்களை சொல்லவில்லை. நாங்கள் கோவிலுக்கு செல்லும் பாதை எதிரிகளின் பட்டா நிலம் என்றால் சரியல்ல. மேற்படி பாதை கோவிலுக்கு சொந்தமானது என்பதற்கு வருவாய் ஆவணங்கள் இல்லை. எதிரிகளின் நிலத்தில் பாதை கேட்டு நாங்கள் தொந்தரவு செய்தோம் என்றால் சரியல்ல. அதற்கான எனது மகன் பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்